முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1529

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.12.2023,** புதன்கிழமை

1. கலியுகம் தனை ஞானவழி மாற்ற
   கருணைகொண்டு என் அவதாரமாக
   அழியாமை பெற்று வந்த அரங்கனே
   ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சோபகிருது தேள் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 20 ம் நாள், 06.12.2023, புதன்கிழமை)
   தன்னிலே அரங்கனால் இந்த உலகமெங்கும்
   தன்னார்வ தொண்டு மிக்க ஞானப்படைகள்
3. அண்ணலாக எங்கும் பரவி பாதுகாப்பு
   ஆற்றலாக உலகை ஞானவழி மீட்கும்
   மீட்கும் மகா சக்திநிலையாக மாறஇருக்க
   முருகப்பெருமான் யான் அரங்கனுள் இருந்து இயக்கம்
4. இயக்கம் பேராற்றலாக செய்து வர
   இனியும் காலம் கடத்தா
   இந்த பேருலகில் மாற்றம் தானும்
   இயல்பாக அரங்கன் தொண்டுவழியே நடந்தேறும்
5. நடந்தேறும் அரங்கன் ஞானத்தாலே
   ஞாலமதில் பேருலகம் ஞானலோகமாக
   வருங்காலம் ஞான யுகமாகவே மாற்றம் பெறும்
   வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–